**செய்தி வெளியீடு எண்: 872** **நாள்: 30.11.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

### <u>மாற்றுத்திறனாளி மாணவ/ மாணவியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தின விழா</u>

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை பின்பற்றி, ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 3–ஆம் நாள் **“அனைத்து நாடுகள் மாற்றுத் திறனாளிகள் தினமாக”** தமிழகத்தில் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அவ்வகையில் டிசம்பர் 3, 2018 அன்று அனைத்து நாடுகள் மாற்றுத்திறனாளிகள் தினம் தொடர்பாக, 1.12.2018 அன்று காலை 9.30 மணி முதல் மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியரின் விளையாட்டுப் போட்டிகள், அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள விளையாட்டரங்கத்திலும், 3.12.2018 அன்று காலை 9.30 மணி முதல் அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள விவேகானந்தா அரங்கில், மாற்றுத்திறனாளி குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

மாலை 4.00 அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பாக சேவை புரிந்த நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை அமைச்சர் டாக்டர். V. சரோஜா அவர்களால் மாநில விருதுகள் வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அரசுச் செயலாளர் திரு. C. விஜயராஜ் குமார், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கி விழா பேருரை ஆற்றவுள்ளார். இவ்விழாவில் மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் திருமதி. ப.மகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்களும், அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொள்கின்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**